**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093891

1. District மாவட்டம் : Madurai  PS: காவல்நிலையம் : V & AC  Year: ஆண்டு 2019  FIR No.: மு.த.அ. எண் 5/19  Date: நாள் 01.03.2019

2. (i) Act சட்டம்: Prevention of corruption  Sections பிரிவுகள்: Section 7 of PC
(ii) Act சட்டம்: Act 1988 as amended by  Sections பிரிவுகள்: Act 1988 as amended
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018.  Sections பிரிவுகள்: by PC (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் —  Date to : நாள் வரை 28.02.2019.
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் —  Time to : நேரம் வரை 13.45 hrs to 17.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2019  Time நேரம் : 14.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.03.2019  Time நேரம் : 15.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed petition. (written type)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Regional Accounts officer (Audit)
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி District Education office campus Madurai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /~~Informant~~ (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Thirumalai  (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Ramakrishanan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Thasildar  (g) Address : முகவரி Deputy Inspection cell officer, madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. S. Parthiban, Age 55/2019 S/o Subbiah, Assistant Director/Regional Accounts officer (Audit), O/o the Regional Accounts officer (Audit), DEO office campus, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—Nil—.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

~~Two~~ Separate sheets in Page No's 3 to 6 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ A.K.KANNAN Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/3/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/3/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.03.2019 at 1600 hrs.

Name: பெயர் K.KUMARAGURU
Rank: நிலை Inspector No. எண் VAAC, Madurai.

Submitted,

இன்று 01.03.2019-ம் தேதி காவல் ஆய்வாளராகிய நான் (K.குமரகுரு), மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.திருமலை அவர்கள் அலுவலக ந.க.எண். நாள்.01.03.2019-ன் கீழ் அளித்த புகார் மனுவை மதுரை ஊ.த.க.பிரிவு, காவல் துணை கண்காணிப்பு பிரிவு அவர்கள் உத்தரவின் பெயரில் மேற்படி புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை பெற்று பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.R.திருமலை, துணைஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 1006/2019/I1, நாள்: 01.03.2019, அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - மாவட்ட கல்வி அலுவலக வளாகத்தில் உள்ள மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் 28.02.2019 -ம் தேதி மேற்கொண்ட திடீர் இணை ஆய்வு - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை வேண்டுதல் குறித்து. பார்வை : மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை நடவடிக்கைகள் நாள் 28.02.2019. நேற்று 28.02.2019-ம் தேதியன்று, மதுரை மாவட்ட கல்வி அலுவலக வளாகத்தில் உள்ள மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில், மாதாந்திர கூட்டம் நடைபெறுவதாகவும், அதில் கலந்து கொள்ளும் அலுவலர்கள், மண்டல கணக்கு அலுவலருக்கு வழக்கமாக லஞ்சம் கொடுப்பதாகவும் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் பகல் 13.45 மணி முதல் 17.30 மணி வரை மேற்படி அலுவலகத்தில் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் உதவியுடன் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின் போது, மதுரை மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) திரு.சு.பார்த்திபன் அவரது அறையில் அலுவலில் இருந்தார். அப்போது அவரது அறையில் இருந்த திரு.சு.சக்திவேல், திரு.பாலமுருகன் மற்றும் திரு.மு.கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்ததில் மேற்படி மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் தாங்கள் கண்காணிப்பாளராக பணிபுரிவதாகவும், ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாளில் மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் நடைபெறும் மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு தாங்கள் மேற்கொண்ட மாதாந்திர தணிக்கை அறிக்கையினை சமர்ப்பித்த பின்னர் திரு.பார்த்திபன் அவர்களிடம் பேசிக்கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். தொடர்ந்து மேற்கொண்ட திடீர் இணை ஆய்வில் மண்டல கணக்கு அலுவலர் திரு.பார்த்திபன் அவர்கள் தனது மேஜையின் இடது பக்க மேல் டிராயரிலிருந்து 8 கவர்களை ஆஜர் செய்தார். அந்த 8 கவர்களை பிரித்து பார்த்ததில் 1) வெள்ளை நிற கவரில் ரூ.11,000/-ம், 2) பிரவுன் நிற கவரில் ரூ.3,000/-ம், 3) வெள்ளை நிற கவரில் ரூ.8,000/-ம், 4) மற்றொரு பிரவுன் கலர் கவரில்

ரூ.7,000/-ம், 5) நீல கலர் கவரில் ரூ.2,500/-ம், 6) மற்றொரு வெள்ளை கலர் கவரில் ரூ.15,000/-ம், 7) வி.முத்துக்குமார் என்று எழுதப்பட்ட பிரவுன் கலர் கவரில் ரூ.5,000/-ம் 8) மற்றொரு பிரவுன் நிற கவரில் ரூ.7,000/-ம் ஆக மொத்தம் ரூ.58,500/- இருந்தது. அந்த பணம் குறித்து, திரு.பார்த்திபன் அவர்களிடம் கேட்ட போது இன்று 28.02.2019-ம் தேதி கண்காணிப்பாளர்களின் மாதாந்திர கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு கண்காணிப்பாளர்களால் கொடுக்கப்பட்ட பணம் என்றும் மேற்படி கவர்களை யார் யார் கொடுத்தார்கள் என்று தன்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றும் விளக்கம் அளித்தார். எனவே மேற்படி பணத்துடன் கூடிய 8 கவர்களும் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, திரு.பார்த்திபன் தான் அணிந்திருந்த வெளிர் நீல நிற சட்டையின் இடது பக்க வெளி பாக்கெட்டில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்தக் கத்தையில் ரூ.3,250/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அது தன்னுடைய சொந்தப்பணம் என்று கூறியதால், திரு.பார்த்திபன் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர் அணிந்திருந்த பிரவுன் நிற பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து 8 கத்தைகளாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி 8 பண கத்தைகளை தனித்தனியாக எண்ணிப்பார்த்தபோது மூன்று கத்தைகளில் தலா ரூ.10,000/-மும், 4வது கத்தையில் ரூ.6,000/-மும், 5-வது கத்தையில் ரூ.7,000/-மும், 6-வது கத்தையில் ரூ.100/-மும், 7-வது கத்தையில் ரூ.1,300/-மும், 8-வது கத்தையில் ரூ.2,000/-மும் ஆக மொத்தம் ரூ.46,400/- இருந்தது. அந்த பணம் குறித்து, திரு.பார்த்திபன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவரால் சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.46,400/- கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பார்த்திபன் அவர்கள் தான் அணிந்திருந்த பிரவுன் நிற பேண்ட்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து 12 பணக் கத்தைகளை ஆஜர் செய்தார். மேற்படி 12 கத்தைகளை தனித்தனியாக எண்ணிப்பார்த்தபோது 1வது கத்தையில் ரூ.8,000/-மும், 2வது கத்தையில் ரூ.16,500/-மும், 3-வது கத்தையில் ரூ.600/-மும், 4-வது கத்தையில் ரூ.10,000/-மும், 5-வது கத்தையில் ரூ.2,000/-மும், 6-வது கத்தையில் ரூ.20,000/-மும், 7-வது கத்தையில் ரூ.14,000/-மும், 8-வது கத்தையில் ரூ.2,000/-மும், 9-வது கத்தையில் ரூ.6,000/-மும், 10-வது கத்தையில் ரூ.12,000/-மும், 11-வது கத்தையில் ரூ.4,000/-மும், 12-வது கத்தையில் ரூ.30,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,25,100/- இருந்தது. அந்த பணம் குறித்து, திரு.பார்த்திபன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது சரியான விளக்கம் அவரால் கொடுக்க முடியவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,25,100/- கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.2,30,000/-ம் திரு.பார்த்திபன், மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) மதுரை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.பார்த்திபன் அவர்களுக்கு எதிரில் அமர்ந்திருந்த திரு.மு.கார்த்திகேயன் என்பவரை விசாரித்தபோது, தனது பணி குறித்தும் 28.02.2019-ம் தேதி நடைபெற்ற மாதாந்திர கூட்டம் நடைபெற்று முடிந்தவுடன் வழக்கம்போல் கூட்டம் முடிந்தவுடன் மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) திரு.பார்த்திபன் அவர்களுக்கு

கொடுப்பதற்காக ரூ.5,000/-ம் வைத்திருப்பதாகவும், அத்துடன் தனது சொந்த செலவுக்காக ரூ.2,280/- வைத்துள்ளதாகவும் வாக்குமூலம் கொடுத்து, மேற்படி பணத்தை ஆஜர் செய்தார். அதில் அவரது சொந்த பணம் ரூ.2,280/- திரு.கார்த்திகேயனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மண்டல கணக்கு அலுவலருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் அமர்ந்திருந்த திரு.சு.சக்திவேல் என்பவரை விசாரித்தபோது, தனது பணி குறித்தும் 28.02.2019-ம் தேதி நடைபெற்ற மாதாந்திர கூட்டம் நடைபெற்று முடிந்தவுடன் வழக்கம்போல் கூட்டம் முடிந்தவுடன் மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) திரு.பார்த்திபன் அவர்களுக்கு கொடுப்பதற்காக ரூ.5,000/-ம் வைத்திருப்பதாகவும், அத்துடன் தனது சொந்த பணம் ரூ.3,030/- வைத்துள்ளதாகவும் வாக்குமூலம் கொடுத்து, மேற்படி பணத்தை ஆஜர் செய்தார். அதில் அவரது சொந்த பணம் ரூ.3,030/- திரு.சக்திவேல் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மண்டல கணக்கு அலுவலருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் அமர்ந்திருந்த திரு.இரா.பாலமுருகன் என்பவரை விசாரித்தபோது, தனது பணி குறித்தும் 28.02.2019-ம் தேதி தானும் கலந்து கொண்டதாகவும் தனது சட்டை பாக்கெட்டிலிருந்து சொந்த செலவிற்கு வைத்திருந்த பணம் ரூ.180/-ஐ ஆஜர் செய்தார். அந்த பணம் திரு.பாலமுருகன் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மண்டல கணக்கு அலுவலக கட்டிடத்தின் மேற்கு கடைசியில் இருந்த பதிவறையில் அமர்ந்திருந்தவர்களை விசாரணை செய்த போது தங்களது பெயர் 1) திரு.ம.முத்தமிழ் அரசு, 2)திரு.மா.இராமசுப்பிரமணியன், 3) திரு.ப.சடாச்சரம், 4) திருமதி.மா.சாந்தி, 5)திரு.வ.முத்துக்குமார் என்றும் அவர்கள் மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் கண்காணிப்பாளர்களாக பணிபுரிவதாகவும் தங்களது பணி குறித்தும் தெரிவித்தார்கள். பின்னர் அவர்களை தனித்தனியாக விசாரணை செய்த போது திரு.ம.முத்தமிழ் அரசு, திரு.மா.இராமசுப்பிரமணியன் ஆகிய இருவரும் 28.02.2019-ம் தேதி நடைபெற்ற மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொள்ள மண்டல கணக்கு அலுவலகம் வந்ததாகவும் வழக்கமாக கூட்டம் முடிந்தவுடன் மண்டல தணிக்கை அலுவலருக்கு செலவுக்கு கொடுப்பதற்காக தலா ரூ.5,000/- கொண்டு வந்துள்ளதாகவும் கூறி அந்த பணத்தை ஆஜர் செய்தனர். மேற்படி பணம் ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.ம.முத்தமிழ் அரசு அவர்களின் சொந்த பணம் ரூ.400/-, 2) திரு.மா.இராமசுப்பிரமணியன் அவர்களின் சொந்த பணம் ரூ.1,730/- அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திரு.ப.சடாச்சரம் என்பவரை விசாரணை செய்தபோது தான் கூட்டம் முடிந்தவுடன் தனக்கும், தன்னுடன் பணிபுரிந்த திரு.நம்பிராஜன் என்பவருக்கும் சேர்த்து மண்டல தணிக்கை அலுவலர் திரு.பார்த்திபன் அவர்களுக்கு சற்று முன்னர் ரூ.11,000/-ஐ வெள்ளை நிற கவரில் வைத்து கொடுத்ததாகவும் சொன்னார். அவர் ஆஜர் செய்த அவரது சொந்த பணம் ரூ.1,360/-

அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.சாந்தி என்பவரை விசாரணை செய்தபோது தான் கூட்டம் முடிந்தவுடன் தனக்கும், தன்னுடன் உதவியாளருக்கும் சேர்த்து மண்டல தணிக்கை அலுவலர் திரு.பார்த்திபன் அவர்களுக்கு சற்று முன்னர் ரூ.10,000/-ஐ கையில் கொடுத்ததாக்வும் சொன்னார். அவர் ஆஜர் செய்த அவரது சொந்த பணம் ரூ.8,500/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.பார்த்திபன் அவர்களின் மேசை டிராயரில் இருந்து கைப்பற்றப்பட்ட 8 கவர்களுள் ஒன்றில் திரு.V.முத்துக்குமார் என எழுதப்பட்ட பிரவுன் கலர் கவரில் ரூ.5,000/- இருந்ததால், மேற்படி அலுவலகத்தில் இருக்கை பணியில் இருந்த திரு.V.முத்துக்குமார் அவர்களிடம் விசாரித்தபோது, தனது பணி குறித்தும் 28.02.2019-ம் தேதி நடந்த மாதந்திர கூட்டம் முடிந்தவுடன் மண்டல தணிக்கை அலுவலருக்கு பிரவுன் கலர் கவரில் பணத்தை வைத்து சற்று முன்பு ரூ.5,000/- கொடுத்ததாகவும் தெரிவித்து தன்னிடமிருந்த தனது சொந்த பணம் ரூ.800/-ஐ ஆஜர் செய்தார். அந்த பணம் ரூ.800/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மதுரை மண்டல கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் மண்டல கணக்கு தணிக்கை அலுவலராக பணிபுரியும் திரு.பார்த்திபன் அவர்கள் தகுந்த முகாந்திரம் சொல்ல இயலாத காரணத்தால், திரு.பார்த்திபன் அவர்கள் தனது அலுவலர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற கணக்கில் காட்டப்படாத பணம் மொத்தம் ரூ.2,50,000/-, பணம் வைக்கப்பட்டிருந்த 8 கவர்கள், திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மூன்று அலுவலக பதிவேடுகள், சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் இணை குறிப்புரை மற்றும் சம்மந்தப்பட்ட ஒன்பது அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து உரிய மேல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். (s/d) (R.திருமலை), துணைஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள்.28.02.2019. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.2,50,000/- மற்றும் 8 கவர்கள். 3)கைப்பற்றப்பட்ட 3 பதிவேடுகள். 4) ஒன்பது அலுவலர்களின் வாக்குமூலங்கள்.

Sir, Received the petition along with documents and registered a case in Madurai V&AC, Crime No.5/2019, u/s.7 of PC Act 1988 as Amended by PC (Amendment) Act 2018 on 01.03.2019 at 15.00hrs. (s/d) K.Kumaraguru, 01.03.2019, Inspector of Police, V &AC, Madurai.

The original FIR along with petition in the name of Tr.R.Thirumalai, Joint surprise check mahazar dated 28.02.2019 and 9 Statements of officials are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trail of PC Act cases, Madurai and other copies were send to the officers concerned.

1/3/19
(K.Kumaraguru)
Inspector of Police.
V & AC
Madurai.